**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**------**

**IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI**

**Sessions Case No. 18 of 2023**

**Deposition of witness for** : PW8

**Name** : **லட்சுமி**

**Father's / Husband Name** : **விஜயகுமார்**

**Village** : **வேலம்பட்டி**

**Taluk** : **போச்சம்பள்ளி**

**Calling** : **இல்லதரசி**

**Age** : 34

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day of July 2025.**

**எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் வேலம்பட்டியில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது மாமனார் அ.சா.2 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும். 06.05.2022 ம் தேதி காலை எனது மாமனார் நிலத்திற்கு சென்றபோது பக்கத்து நிலத்தில் டிராக்டர் ஓட்டி கொண்டிருந்த அஜீத்திடம் எங்கள் நிலத்தையும் ஓட்டிக்கொடுக்கும்மாறு கேட்டுக்கொண்டிருக்தகிறார். அப்போது கருணாநிதி என்பவர் எங்கள் நிலத்தில் சென்று கிருஷ்ணன் நிலத்தை ஓட்டக்கூடாது என்றும் அப்படி ஓட்டினால் டிராக்டரை கொளுத்தி விடுவேன் என்று சொல்லி உள்ளார். பின்னர் எனது

மாமனார் வீட்டிற்கு வந்து எனது கணவரிடம் மேற்படி விவரம் பற்றி சொன்னார். அப்போது சண்டை எதுவும் வேண்டாம் என எனது கணவர் சொன்னார். அன்று காலை 9 மணிக்கு மோட்டார் ரிப்பேர் செய்வதற்காக மெக்கானிக் வந்திருந்தார். அதற்காக எனது மாமனார் நிலத்திற்கு சென்றார். எனது கணவர் சுமார் 10 மணி அளவில் ஏற்கனவே கருணாநிதி அஜீத்திடம் நிலம் ஓட்டக் கூடாது என சொன்னதால் பிரச்சனை எதுவும் வரும் என நினைத்து எனது கணவர் நிலத்திற்கு சென்றார். அவர் சென்று நேரம் ஆனதால் நான் போன் செய்தேன். ஆனால் அவர் எடுக்கவில்லை. நான் வெளியே ரோட்டில் நின்று கொண்டு இருந்துபோது அங்கே சண்டை நடப்பதாக சொன்னார்கள். நான் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்றேன். நான் அந்த இடத்திற்கு சென்று பார்த்தபோது கருணாநிதி கையில் கத்தி இருந்தது. அப்போதே எனது கணவரின் தலையை வெட்டி விட்டு இருந்தது. எதிரிகள் அனைவரும் கூட்டமாக இருந்தார்கள். கற்களை எடுத்து எனது மாமனார் எனது கணவர் மற்றும் மெக்கானிக்கல் ஆகியோர் இருந்த பக்கம் நோக்கி கற்களை வீசிக்கொண்டிருந்தார்கள். எனது கணவரின்தலையில் ரத்தம் அதிகம் வடிந்தது. அப்போது அங்கிருந்த எதிரிகள் ஓட ஆரம்பித்தார்கள். அவருக்கு அதிக ரத்தம் வெளியே வந்ததால் அவரை இருசக்கர வாகனத்தில் காவேரிபட்டிணம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். தலையில் 21 தையல் போட்டு உள்ளார்கள். வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை அளித்தார்கள். அவருக்கு தலையில் அதிகம் காயம் ஏற்பட்டிருந்ததால் மேல் சிகிச்சைக்காக பெங்களூரில் உள்ள செண்ட்-ஜான்ஸ் மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அன்று சிகிச்சை அளிக்கப்பட்ட பின்பு மறுநாள் காலையில் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு தொடர் சிகிச்சைக்காக அழைத்து வந்து சேர்த்தோம். அங்கு 4 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் பிறகுதான் எனது மாமனார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரம் தெரிந்தது. எதிரிகளுக்கும் எனது மாமனாருக்கும் 15 ஆண்டுகாலமாக வழி பிரச்சனை இருந்து வருகிறது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்குவிசாரணை

ராஜ்குமார் எனது மச்சனன் என்றால் சரிதான். நாங்கள் எனது மாமனார் ராஜ்குமார் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வருகிறோம் என்றால் சரிதான். வழிப்பிரச்சனை சம்பந்தமாக எனது மாமனாரோ எனது கணவரோ மச்சனனோ சிவில் வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமோ என்றால் இல்லை. நான்திருமணம் செய்து, சென்ற போதிலிருந்தே வழி பிரச்சனை இருந்து வருகிறது என்றால் சரிதான். இது சம்பந்தமாக காவல் நிலையத்திலோ பஞ்சாயத்திலோ பைசல் பேசினார்களா என்றால் பேசினார்கள். எனது திருமணத்திற்கு முன்பு பேசினார்கள் . எனக்கு திருமணம் ஆகி கடந்த 5 வருடங்களாக பஞ்சாயத்து பேச வில்லை என்றால் சரிதான். எனது மாமனார் எத்தனை வருடங்களுக்கு முன்பு சொத்தை வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. நாங்கள் எதிரிகள் வழியிலும் எதிரிகள் எங்கள் வழியிலும் வந்து செல்லவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு நடந்த செல்வது பிரச்சனை இல்லை வண்டியில் செல்லும்போதுதான் பிரச்சனை ஏற்படுகிறது. எங்கள் வீட்டில் முடிவு எடுப்பது யார் என்றால் எனது மாமனார்தான். இந்தவழக்கில் புகார் கொடுத்துள்ளது எனது மாமனார் என்றால் சரிதான். எதிரிகளை எங்கள் தரப்பில் அடித்ததாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளது என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் நான் போகும்போது சண்டை முடிந்து எனது கணவரை வெட்டி விட்டு இருந்தார்கள். எங்களது நிலத்தருகேதான் சண்டை நடந்தது என்றால் சரிதான். சுமார் 20 பேர்கள் பார்திருப்பார்கள். சண்டை எவ்வளவு நேரம் நடந்தது என்றால் சுமார் 10 மணி முதல் 12 மணி வரை நடந்தது. மேற்படி தகவல்களை போலிஸார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். மருத்துவரிடம் எனது கணவரை சேர்க்கும்போது சண்டை 10 மணி முதல் 12 மணி வரை நடந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவரை நான் தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். மருத்துவமனையில் சேர்த்தபோது நான் சொன்னதை மருத்துவர் குறித்துக்கொண்டார். மருத்துவரிடம் 6 பேர் அடித்ததாக சொன்னோம் அவ்வாறு நானும் எனது கணவரும் சொன்னோம். மேற்படி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகள் தான்

போலிஸாரிடமும் மருத்துவரிடமும் சொன்னேன் என்றால் சரிதான். அஜீத்திடம்நான் நேரடியாக பேசினேனா என்றால் இல்லை. மோட்டார் மெக்கானிக் எத்தனை மணி இருந்து எத்தனை மணி வரை வேலை செய்தார் என்றால் காலை 9 மணிக்கு எனது மாமனார் சென்று விட்டார். மாரியப்பன் மற்றும் முருகன் ஆகியோர் எனது வீட்டிற்கு 9 மணிக்கு வந்தார்கள். எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்றால் வந்து உடனடியாக எனது மாமனாரை அழைத்து சென்றுவிட்டார்கள். நான் வெளியில் எனது கடை அருகே இருந்த போது சண்டை நடப்பதாக பேசிக்கொண்டதன் பேரில்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். என் நிலத்திற்கும் வீட்டிற்கும் இடையிலான தூரம் எவ்வளவு என்றால் சுமார் 500 மீட்டர் இருக்கும். எங்களது நிலத்தை சுற்றி வேலிபோட்டுள்ளோம் என்றால் சரிதான். எங்களது நிலத்திற்கு செல்லும் நுழைவாயில் மட்டும் வேலிபோடவில்லை. மற்ற இடத்தில் போட்டுள்ளோம். எனது மாமனார் எனது கணவர் மற்றும் சாட்சி சொன்னவிவரம் தெரியும். விசாரித்ததை என்னிடம் சொன்னார்கள். எந்தவகையான கல்லை எடுத்து எதிரிகள் போட்டுக்கொண்டு இருந்தார்கள் என்றால் நிலத்தில் இருக்கும் கற்கலைதான் எடுத்து வீசிகொண்டு இருந்தார்கள். நான் சென்றபோதும் என் மீதும் வீசினார்கள். என் மீது வீசப்பட்ட கல் எவ்வளவு எடை இருக்கும் என்றால் சுமார் 200 கிராம் இருக்கும். மேற்படி விவரத்தை மருத்துவரிடம் சொன்னேன். மருத்துவமனையில் நான் சிகிச்சையில் சேர்ந்தேனா என்றால் எனக்கு அவ்வளவு காயம் இல்லை என்பதால் சேரவில்லை. மேற்படி விவரத்தை எனது மாமனார் புகாரில் சொல்லியுள்ளார் என்றால் இல்லை. கருணாநிதி வைத்திருந்த கத்தியில் நான் செல்லும் போது இரத்தம் படிந்திருந்தது. எனது கணவரின் கையில் எதனால் அடித்தார்கள் என்பதை பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது கணவரை கருணாநிதி கத்தியால் வெட்டியதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல. தள்ளு முள்ளு ஏற்பட்டதில் எனது கணவர் தவறி கல்லில் விழுந்ததால் தான் மேற்படி காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளை நாங்கள் தான் தாக்கினோம் என்றாலும் அவர்கள் எங்களை தாக்கவில்லை என்றாலும் மேற்படி எதிரிகள் கொடுத்த வழக்கில் இருந்து எனது குடும்ப

உறுப்பினர்களை தப்பிக்க வைப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் எதிரிகள் நிலத்தில் அக்கிரமான முறையில் வண்டி வழி பாதை அமைக்கவும் தண்ணீர் பைப்பு அமைக்கவும், சட்ட விரோதமாக பொய்யான புகாரை எனது மாமனார் கொடுத்து எனது குடும்ப உறுப்பினர்கள் சேர்ந்து எதிரிகள் மீது போலிஸார் துனையுடன் பொய்யான புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்துள்ள சான்று கொடுவால் போலிஸ் துனைவுடன் ஜோடனை செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சிரியல்ல.

ஓம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.